# அக்டோபர் – 12 – வெள்ளி

### புனித வில்பிரட்

## முதல் வாசகம் : கலாத்தியர் 3 : 7 - 17

சகோதர சகோதரிகளே! நம்பிக்கைகொண்டு வாழ்பவர்களே ஆபிரகாமின் மக்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். நம்பிக்கை கொள்ளும் பிற இனத்தாரையும் கடவுள் தமக்கு ஏற்புடையவராக்குவார் என்பதை முன்னறிந்துதான் மறைநூல், "உன்வழியாக மக்களினங்கள் அனைத்தும் ஆசிபெறும்" என்னும் நற்செய்தியை ஆபிரகாமுக்கு முன்னுரைத்தது.ஆகவே நம்பிக்கை கொண்ட ஆபிரகாம் பெற்ற அதே ஆசியில் நம்பிக்கை கொள்வோரும் பங்குபெறுவர்.திருச்சட்டம் சார்ந்த செயல்களையே நம்பியிருப்பவர்கள் சாபத்துக்கு ஆளானவர்கள் ஏனெனில், "திருச்சட்டத்தின் வார்த்தைகளை எல்லாம் கடைப்பிடித்து நடவாதோர் சபிக்கப்படட்டும்!" என்று எழுதியுள்ளது.சட்டம் சார்ந்த செயல்களால் எவரும் கடவுள் முன்னிலையில் ஏற்புடையவர் ஆவதில்லை என்பதும் தெளிவு. ஏனெனில், "நேர்மையுடையோர் தம் நம்பிக்கையால் வாழ்வடைவர்."திருச்சட்டம் நம்பிக்கையை அடிப்படையாய்க் கொண்டது அல்ல. மாறாக, "சட்டம் சார்ந்தவற்றைக் கடைப்பிடிப்போர் அவற்றால் வாழ்வு பெறுவர்" என்று எழுதியுள்ளது."மரத்தில் தொங்கவிடப்பட்டோர் சபிக்கப்பட்டோர்" என்று எழுதியுள்ளவாறு நமக்காகக் கிறிஸ்து சாபத்துக்கு உள்ளாகி நம்மைச் சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக்கொண்டார்.ஆபிரகாமுக்குக் கிடைத்த ஆசி இயேசு கிறிஸ்துவின் வழியாய்ப் பிற இனத்தார்க்கும் கிடைக்கவும் வாக்களிக்கப்பட்ட தூய ஆவியை நாம் நம்பிக்கையின் வழியாய்ப் பெற்றுக்கொள்ளவுமே இவ்வாறு செய்தார்.சகோதர சகோதரிகளே. உலக வழக்கிலி ருந்து ஓர் எடுத்துக் காட்டுத்தருகிறேன். மனிதர் முறைப்படி செய்துமுடித்த உடன்படிக்கையை யாரும் செல்லாததாக்கவோ அதனுடன் எதையும் சேர்க்கவோ முடியாது.வாக்குறுதிகள்ஆபிரகாமுக்கும் அவரது வழிமரபினருக்கும் தரப்பட்டன. பலரைக் குறிக்கும் முறையில் "வழி மரபினர்களுக்கு" என்று இல்லாமல் ஒருவரையே குறிக்கும் முறையில் "உன் மரபினருக்கு" என்று உள்ளது. அந்த மரபினர் கிறிஸ்துவே.என் கருத்து இதுவே. கடவுள் ஏற்கெனவே முறைப்படி செய்து முடித்த உடன்படிக்கையை நானூற்று முப்பது ஆண்டுகளுக்குப்பின் வந்த திருச்சட்டம் செல்லாததாக்கிவிட முடியாது. அவரது வாக்குறுதியைப் பொருளற்றதாக்கி விடவும் முடியாது.

**பதில்பாடல் :** ஆண்டவர் தமது உடன்படிக்கையை என்றும் நினைவில் கொள்கின்றார்.

## நற்செய்தி : லூக்கா 11 : 15 - 26

அக்காலத்தில் மக்களுள் சிலர், "பேய்களின் தலைவனாகிய பெயல்செபூலைக் கொண்டே இவன் பேய்களை ஓட்டுகிறான்" என்றனர். வேறுசிலர் அவரைச் சோதிக்கும் நோக்குடன், வானத்திலிருந்து ஏதேனும் ஓர் அடையாளம் காட்டுமாறு அவரிடம் கேட்டனர். இயேசு அவர்களுடைய சிந்தனைகளை அறிந்து, அவர்களிடம் கூறியது : "தனக்கு எதிராகத் தானே பிளவுபடும் எந்த அரசும் பாழாய்ப்போகும். அவ்வாறே பிளவுபடும் வீடும் விழுந்துவிடும். சாத்தானும் தனக்கு எதிராகத் தானே பிளவுபட்டுப் போனால் அவனது அரசு எப்படி நிலைத்து நிற்கும்? பெயல்செபூலைக்கொண்டு நான் பேய்களை ஓட்டுகிறேன் என்கிறீர்களே, நான் பெயல்செபூலைக்கொண்டு பேய்களை ஓட்டுகிறேன் என்றால் உங்களைச் சேர்ந்தவர்கள் யாரைக் கொண்டு பேய் ஓட்டுகிறார்கள்? ஆகவே அவர்களே உங்கள் கூற்று தவறு என்பதற்குச் சாட்சிகள். நான் கடவுளின் ஆற்றலால் பேய்களை ஓட்டுகிறேன் என்றால் இறையாட்சி உங்களிடம் வந்துள்ளது அல்லவா! வலியவர் ஆயுதம் தாங்கித் தம் அரண்மனையைக் காக்கிறபோது அவருடைய உடைமைகள் பாதுகாப்பாக இருக்கும். அவரைவிட மிகுந்த வலிமையுடையவர் ஒருவர் வந்து அவரை வென்றால் அவர் நம்பியிருந்த எல்லாப் படைக் கலங்களையும் பறித்துக் கொண்டு, கொள்ளைப் பொருளையும் பங்கிடுவார். என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கிறார் என்னோடு இணைந்து மக்களைக் கூட்டிச் சேர்க்காதவர் அவர்களைச் சிதறடிக்கிறார். ஒருவரைவிட்டு வெளியேறுகின்ற தீய ஆவி வறண்ட இடங்களில் அலைந்து திரிந்து இளைப்பாற இடம்தேடும். இடம் கண்டுபிடிக்க முடியாமல், " நான் விட்டுவந்த எனது வீட்டுக்குத் திரும்பிப் போவேன்" எனச் சொல்லும். திரும்பிவந்து அவ்வீடு கூட்டி அழகு படுத்தப்பட்டிருப்பதைக் காணும். மீண்டும் சென்று தன்னைவிடப் பொல்லாத வேறு ஏழு ஆவிகளை அழைத்து வந்து அவருள் புகுந்து அங்கே குடியிருக்கும். அவருடைய பின்னைய நிலைமை முன்னைய நிலைமையைவிடக் கேடுள்ளதாகும்" என்றார்.

**தியானம்:** மனிதனின் சிந்தனை ஒன்று இறைவனின் திட்டம் வேறொன்று. இன்றைய நற்செய்தியை நாம் மேலோட்டமாகப் பார்க்கும் போது இறைமகன் இயேசு பெயேல் செபூலையும் அசுத்த ஆவிகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றார் எனக்கருதலாம். மாறாக நற்செய்தியை நாம் ஆழமாக உற்று நோக்குவோமாயின் பிரிவினைவாதிகளால் எத்தனை தப்பான போதனைகள் எம்மத்தியில் பரப்பப்பட்டாலும், நாம் அன்னையாம் திருச்சபையை விட்டுவிலகாமல் நிலைத்து நிற்க வேண்டும் என்று உணர்த்துகின்றது. ஏனெனில் இறைமகன் இயேசு “பாறை” பேதுருவின் மேல் ஆரம்பித்த திருச்சபையை விட்டுப் பிரிந்து நாம் பிளவுபட்டுப் போவோமாயின், “தனக்கெதிராகதானே பிளவுபட்ட அரசு போன்று” நாமும் நிலைத்து நிற்கமாட்டோம். வீழ்ந்துமடிவோம் என்ற உண்மையும் தெளிவாகின்றது. பரமதிருத்துவத்தில் தந்தை, மகன், தூய ஆவி எவ்வாறு இணைந்துள்ளார்களோ அவ்வாறே நாம் கிறிஸ்துவுக்குள் அன்னையாம் திருச்சபையில் இணைந்திருத்தல் வேண்டும். ஏனெனில் இறைமகன் இயேசுவிலே நாம் நிலைத்திருப்போமாயின் ஆண்டவரின் நாள் நெருங்கி வரும் போது சிதறிப்போகமாட்டோம். சத்துருவானவன் வலிமைமிகு எப்படையோடு வந்தாலும் வலியவரான ஆண்டவர் ஆயுதம் தாங்கி எம்மைக்காப்பார். எம்மத்தியில் பிளவுகள், பிரிவினைகள் உருவாக்கவென எத்தனையோ சக்திகள் முயலுவதனை நாம் அறியாதவர்கள் அல்ல. இறைமகன் கிறிஸ்துவாலே “நீ பாறையாய் இருக்கிறாய், இப்பாறையின் மேல் எனதுதிருச்சபையைக் கட்டுவேன்” என்று கட்டியெழுப்பப்பட்ட அன்னையாம் திருச்சபையில் நாமும் ஒரு உறுப்பினர் என்ற உறுதிப்பாட்டை நிலைநாட்டுவோம். “என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கிறார். என்னோடு இணைந்து மக்களைக் கூட்டிச் சேர்க்காதவர் அவர்களைச் சிதறடிக்கிறார்” என்ற “இறைவார்த்தை சொன்னதைச் செய்யாமல் திரும்பாது”.